Deposition of witness.
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ATHOOR.
C.C.No.70/2021

**Deposition of PW.6**

**பெயர்** : மருதுபாண்டி

த/பெ. : சுப்பையா

**கிராமம்** **:** ஆலத்துாரான்பட்டி

**தாலுகா** **:**

**தொழில்** **:** விவசாயம்

**மதம்** **:**

**வயது.** **:** 28/2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.12.2022

முதல் விசாரணை

நான் ஆலத்துாரான்பட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 31.07.2021 அன்றும் நானும் கருப்பையா என்பவரும் சொந்த வேலையாக ஆலத்துாரான்பட்டியில இருந்து கன்னிவாடி வழியாக ஒட்டன்சத்திரத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம் அப்போது காலை 07.00 மணியளவில் பன்னைபட்டி அருகே உள்ள தொட்டராயன்கோவில் அருகே சென்றபோது கன்னிவாடி போலீஸ் ஆய்வாளரா அல்லது உதவி ஆய்வாளரா என்று தெரியவில்லை அங்கு இருந்தார்கள். எங்களை அழைத்து விசாரித்தார்கள். மேலும் நேற்நு இந்த இடத்தில வழிமறித்து பைக் திருடு போய்விட்டது தெரியுமா என்று கேட்டார்கள் நாங்கள் தெரியும் ஊரில் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னோம். போலீசார் வரைபடம் வரைந்து எழுதி வைத்திருந்தார்கள். அதில் பார்வை மகசர் எழுதியிருககிறோம் என்று எங்களை சாட்சி கையொப்பம் போட சொன்னார்கள். நானும் கருப்பையாவும பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் போட்டோம் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகசரை அங்கு இருந்த உதவி ஆய்வாளர் தான் எழுதினார். சம்பவம் நடந்த இடத்தில் தான் பார்வை மகசர் எழுதினார்கள். நான் எப்படி சாட்சி சொல்ல வேண்டும் என்று போலீசார் என்னிடம் சொல்லி தரவில்லை. இந்த சம்பவத்தில் என்ன வாகனம் திருடு போனது என்று தெரியவில்லை. நாங்கள் எந்த வாகனத்தில் சென்றோம் என்று வாகனத்தின் பதிவு எண் குறிப்பிட்டு சொல்லவில்லை. எங்களை விசாரித்த அதிகாரியின் பெயர் தெரியவில்லை. அன்று விசாரணை செய்ததற்கு பிறகு போலீசார் எங்களை விசாரிக்கவில்லை. நான் கையொப்பம்

போட்டதில் 4 புறமும் உள்ள தோட்டம் யாருக்கு சொந்தமானது என்று  எனக்கு தெரியவில்லை. போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான்.

P JAISANKAR Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor